ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 455)   Nov (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)..23

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)..26

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 273)

117. ப்ரதமே மத்யமேऽந்தே ம்ருத்பாகே க்ரமச: ஸுதீ:
அஸ்நம் ச மூலமந்த்ரம் சாப்யங்கமந்த்ரம் ச ஸம்ஸ்மரேத்

பொருள் – சாதகன் முறையே மண்ணின் ஆரம்பம், நடு, மற்றும் முடிவில், அன்னத்தையும் (உணவையும்), மூல மந்திரத்தையும், மற்றும் அங்க மந்திரத்தையும் த்யானிக்கவேண்டும்.

118. தச திக்ஷு க்ஷிபேதஸ்த்ரம் ஸர்வவிக்ந உபசாந்தயே
மூல மந்த்ராந்விதம் பாகம் தீர்தமத்யே விநிக்ஷிபேத்

பொருள் – அனைத்து தடைகளும் நீங்குவதற்காக அஸ்த்ர மந்த்ரம் கொண்டு தூய்மையாக்கிய மண்ணை, பத்து திசைகளிலும் தெளிக்க வேண்டும். மூல மந்திரத்துடன் கூடிய (சேர்க்கப்பட்ட) அந்தப் பகுதியை தீர்த்தத்தின் நடுவில் சேர்க்கவேண்டும்.

ஶ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஶ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 420)

6-8-4. தூமது வாய்கள் கொண்டு வந்து என் முல்லைகள் மேல் தும்பிகாள்
பூ மது உண்ணச் செல்லில் வினையேனைப் பொய் செய்து அகன்ற
மாமதுவார் தண் துழாய் முடி வானவர் கோனைக் கண்டு
யாம் இதுவோ தக்கவாறு என்ன வேண்டும் கண்டீர் நுங்கட்கே

பொருள் – நான் வளர்க்கின்ற முல்லைகள் மீது தங்கிச் செல்லும் தும்பிகளே! தூய்மையான மதுவைக் கொண்டு அடையாளம் காணத்தக்க உங்கள் வாய்கள் கொண்டு, அந்த முல்லைகளின் அருகில் வந்து, அவற்றில் உள்ள மதுவைப் பருக நீங்கள் எண்ணினால், இந்த முல்லைகளில் சில வாடிக் கிடக்கும் நிலையைக் கண்டு உங்கள் மனதை அவற்றில் செலுத்தாமல்; அவனைப் பிரிந்து கிடக்கும் நிலையை அடையவல்ல பாபம் செய்த என்னை, வஞ்சகமாகச் சில செயல்கள் செய்து பிரிந்து சென்றாலும், இந்தப் பிரிவே அவன் உற்சாகத்தின் காரணம் என்பதை வெளிப்படுத்தும் விதமாக, மிகுந்த தேன் வெள்ளம் போன்று பெருகி நிற்கும் குளிர்ந்த அழகான துளசிமாலையால் அலங்கரிக்கப்பட்டவனும், வானவர் தலைவனும் ஆகிய அவனை நீங்கள் கண்டு, "உம்முடைய மேன்மையை இவ்விதம் நாங்கள் கொண்டாடியபடி இருப்பதும், ஆனால் நீவிர் அவளை எண்ணாமல் இருப்பதும் தகுந்ததோ?", என்று கேட்பீர்களாக.

அவதாரிகை – "என்னை நோவுபடுத்திப்போய் எட்டாநிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலே சென்று சொல்லுங்கோள்!" என்று சில தும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

விளக்கம் - ஒரு சில தும்பிகளிடம், “என்னைத் துன்பத்தில் ஆழ்த்திய பின்னர், தான் ஒரு தூரமாக உள்ள இடத்தில் சபையில் வீற்றிருப்பது போன்று உள்ளான். இது தகுந்ததோ?”, என்று அவன் உள்ள திவ்யதேசத்திற்குச் சென்று கூறவேண்டும் என்று உரைக்கிறாள்.

வ்யாக்யானம் - (தூ மது வாய்கள் கொண்டு வந்து) பரிசுத்தமாய் இனிதான பேச்சையுடைய வாயைக் கொண்டு சென்று. வந்தென்றது - சென்றென்றபடி. ஆர்த்தர்க்கு உஜ்ஜீவந ஹேதுவாய் இனிதுமான பேச்சைக் கொண்டு. (என் முல்லைகள் மேல் தும்பிகாள்) உடன்கேடராயொக்கப் பட்டினி விட்டுக் கிடப்பாரைப் போலேயிறே நீங்கள் கிடக்கிறது. இவள் குழலில் பூவோடொக்க, உத்யாநத்திலுள்ள பூக்களும் சருகாயிறே கிடப்பது; “அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:” என்னுமாபோலே.

விளக்கம் – (தூ மது வாய்கள் கொண்டு வந்து) - தூய்மையும் இனிமையும் வாய்களுக்கு இல்லை என்பதால், “பேச்சையுடைய” என்கிறார். அதாவது பரிசுத்தமான இனிமையான பேச்சைக் கொண்ட வாயைக் கொண்டு சென்று. “வந்து” என்பது “சென்று” என்பதாகப் பொருள். அல்லது, துக்கத்தில் உள்ளவர்கள் பிழைக்கும்படியாக உள்ள இனிமையான பேச்சைக் கொண்டு. (என் முல்லைகள் மேல் தும்பிகாள்) - “முல்லைகள் மேல்” என்று கூறாமல் “என் முல்லைகள் மேல்” என்று ஏன் கூறவேண்டும்? என்னுடன் சேர்ந்து ஒரே போன்று துக்கத்தில் நின்று, ஏதும் உண்ணாமல் உள்ளவர்கள் போன்று அல்லவோ இந்த முல்லைகள் உள்ளன; ஆகவே “என்” என்கிறாள். இவள் ஏன் அந்தத் தும்பிகளை, இவளைப் போன்று பட்டினி இடவேண்டும்? இவள் வளர்க்கும் முல்லையில் மது உள்ளது அல்லவோ? இதற்கு விடை அருளிச்செய்கிறார். இவளுடைய கூந்தலில் உள்ள மலர்கள் போன்று, அவளுடைய தோட்டத்தில் உள்ள மலர்களும் காய்ந்து சருகாக அல்லவோ உள்ளன! ஆனால் இவளுடைய கூந்தலில் உள்ள மலர்கள் காய்ந்ததால், தோட்டத்தில் உள்ள மலர்களும் வாடுமோ என்பதற்கு ப்ரமாணம், அயோத்யாகாண்டம் (59-4) - அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: - மரங்கள் உதிர்ந்து கிடந்தன - என்பது போன்று ஆகும்.

வ்யாக்யானம் - (பூமதுவுண்ணச் செல்லில்) மது வ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபாநம் பண்ணப் போகக் கடவிகோளிறே. இவள் பரிஸரத்திலுள்ளவையிறே உறாவிக் கிடப்பன; அங்குள்ளவையெல்லாம் செவ்வி பெற்றிருக்குமிறே; “மாமதுவார் தண்டுழாய் முடி வானவர்கோனி”றே. அவர்களில் இவனுக்கு வாசி, கவித்த முடியும் இட்ட மாலையுமேயிறே. இங்குள்ள வண்டுகள்போலே பட்டினி கிடக்க வேண்டாவிறே அங்குள்ளார்க்கு. (மாமதுவார் தண்டுழாய்) விரஹத்திலும் ஊற்று மாறாதவிடங்காணும் அவ்விடம்.

விளக்கம் – (பூ மது உண்ணச் செல்லில்) - ஆனால் மதுவைப் பருக ஒரு இடம் தேடிச் செல்லவேண்டுமோ என்றால், மதுவை மட்டுமே பருகுபவை என்பதால், மலர்கள் உள்ள இடம் தேடிச் சென்று, மதுவைப் பருகச் செல்வீர்கள் அல்லவோ? சரி, இவள் அந்தத் தும்பிகளிடம் “அவன் உள்ள இடம் சென்று மதுவைப் பருகி, அவனிடம் எனது நிலையைக் கூறுங்கள்” என்றாள்; இவளைப் போன்று அவனுக்கும் விரஹம் காரணமாக, அங்குள்ள மதுவும் வற்றியிருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவள் அருகில் உள்ளவை மட்டுமே இவ்விதம் காய்ந்து உள்ளன, அவனிடம் உள்ள அனைத்தும் அழகாகக் கொழித்து இருக்கும் அல்லவோ! அவனுடன் உள்ளவை அவ்விதம் விளங்கக் காரணம் என்ன என்றால், ““மாமதுவார் தண்டுழாய் முடி வானவர்கோன்” என்பதே ஆகும். அங்குள்ள வானவர்களைக் காட்டிலும் இவனுக்கு உள்ள வேறுபாடு என்னவென்றால், க்ரீடத்துடன் அவர்கள் இருந்தாலும், இவன் போன்று அங்கு துளசிமாலை இல்லை. இங்குள்ள வண்டுகள் போன்று அங்குள்ள வணுகள் பட்டினியாக இருக்க வேண்டியதில்லை. (மாமதுவார் தண்டுழாய்) - விரஹத்திலும் ஊற்று மாறாமல் மது ஒழுகியபடியே உள்ளது.

வ்யாக்யானம் - (பூமதுவுண்ணச் செல்லில்) இவள், தன் குழலிற் பூவும் வாடி மதுவும் வற்றின பின்பு இனி இவ்விபூதியிலுண்டாக மாட்டாதென் றிருக்கிறாள்; இனி விபூதிமான் பக்கலிலே யுண்டாகில் உண்டாமத்தனை யென்றிருக்கிறாள். (வினையேனை) அவன் என் பக்கற் பேசின பேச்சுக்களையும் வ்யாமோஹத்தையும் “மெய்” என்றிருக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை. (வினையேனைப் பொய் செய்து) “கடுகப் பிரியில் இடி விழுந்தாற்போலே இவள் முடியும்” என்று பார்த்து, “நின்னைப் பிரியேன், பிரியிலுமாற்றேன்” என்றாற் போலேயிருக்க, அவன் பிரிவையுணர்த்தினான்; நான் அதுக்குத் தாத்பர்யம் அறியாமை கெட்டேன். அறிந்தேனாகில், போகாதபடி காற்கட்டலாயிற்றுக்கடீர்!

விளக்கம் – (பூ மது உண்ணச் செல்லில்) - இவள் அருகில் மது இல்லையென்றால், தும்பிகள் அவனிடம் ஏன் செல்லவேண்டும்? இந்த உலகில் வேறு எங்கும் மது இல்லையோ என்பதற்கு அளிக்கிறார்; இவள், தனது கூந்தலில் உள்ள மலர்கள் வாடியதன் காரணமாக, அதில் உள்ள மது வற்றியதால், இந்த உலகில் இனி மது உண்டாகாது என்று எண்ணுகிறாள். ஆகவே இந்த உலகத்தின் உடைமைக் காரணமாகிய ஸர்வேச்வரனிடம் இருக்கலாம் என்று உள்ளாள். (வினையேனை) - அவன் என்னுடன் பேசிய பேச்சுகளாகிய "பேதையாகிய உன்னைப் பிரியமாட்டேன்" என்பது போன்றவற்றையும், கைகளையும் கால்களைப் பிடித்துச் செய்த மயக்க செயல்களையும் உண்மை என்றே எண்ணி மயங்கும்படியாக உள்ள பாபம் செய்த என்னை. (வினையேனைப் பொய் செய்து) - அவன் பேசிய சொற்களையும், அவற்றை உண்மை என்று எண்ணும் விதத்தையும் விவரித்த பின்னர், பிரிய எண்ணுபவன் ஏதும் செய்யாமல் பிரிந்து செல்லலாம் அல்லவோ, இவ்விதம் பலவற்றையும் கூறிப் பிரியவேண்டுமோ என்ற ஐயத்தை அடுத்து நீக்குகிறார்; "இவளை விட்டு விரைவாகப் பிரிந்தால், இடி விழுந்தது போன்று இவள் முறிந்து விடுவாள்" என்று எண்ணினான்; ஆகவே, "உன்னை விட்டுப் பிரியமாட்டேன். பிரிந்தாலும் பொறுக்கமாட்டேன்" என்று உள்ளது போன்று இருந்து, தனது பிரிவை எனக்கு உணர்த்தினான். அதன் கருத்து அறியாமல் நான் கெட்டேன். அறிந்தால் என்ன செய்ய இயலும்? அறிந்திருந்தால் செல்லாதபடி நிறுத்தியிருப்பேன்.

வ்யாக்யானம் - (பொய் செய்து) ஸம்ச்லேஷத்தில் அபர்யாப்தியிருக்கிறபடி. சிரகாலம் ஜீவிக்கச் செய்தேயும் "ஒரு ஸ்வப்நமாய்ப் போயிற்று" என்னக் கடவர்களாயிற்று, விச்லேஷத்தோடே வ்யாப்தமாகையாலே. கனவென்றும், இந்திரஜாலமென்றும், பொய்யென்றும் அபர்யாப்தமான போகத்தைச் சொல்லக்கடவது. (பொய் செய்தகன்ற) அகலுகைக்கு இட்ட வழியிருக்கிறபடி. "கலக்க" என்று பேரையிட்டு, பர்யாப்தமாகக் கலவாதே வஞ்சித்து அகன்ற.

விளக்கம் – (பொய் செய்து) - "பொய் செய்து" என்பதற்கு, "உன்னைப் பிரியமாட்டேன் என்பது போன்று பொய்யான பேச்சுக்கள்" என்பதாகப் பொருள் கூறினார்; இனி," "பொய் செய்து" என்பதற்கு, "நிறைவேறாத சேர்க்கை" என்பதாக

வேறு ஒரு பொருளும் கூறுகிறார்; அதாவது சேர்க்கை காலத்தில் குறை இருந்தது; அதாவது நீண்ட நாட்கள் உயிருடன் உள்ளபோதிலும், "ஒரு கனவு போன்று போயிற்று" என்று, பிரிவுடன் முடிவு வந்தவர்கள் கூறுவார்கள் அல்லவோ? ஆனால் "பொய்" என்பது "நிறைவேறாத சேர்க்கை" என்னும் பொருளைத் தருமோ என்பதற்கு விடை அளிக்கிறார். முடிவு பெறாத இனிமையை "கனவு, இந்த்ரஜாலம், பொய்" என்று கூறுவர். ஆனால், முதலில் ஏன் சேரவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; சேர்ந்தால் அல்லாமல் பிரிவது ஏற்படாது என்பதால், துக்கம் உண்டாக்குவதற்கான வழி என்று கருத்து; அதாவது "சேர்தல்" என்பதாகச் செய்து, அது முடிவு வரை செல்லாமல், வஞ்சித்து அகன்றான்.

வ்யாக்யானம் - (மாமதுவார் தண்டுழாய் முடி) இங்குள்ளதும் அங்கேயாகையாலே மது இரட்டித்திருக்குமிறே. தலையான மதுவுமே அதுதான். ஸம்ச்லேஷ விச்லேஷங்களில் ஒருபடிப்பட்டிருக்கும் அவனைக் கண்டு. (வானவர் கோனைக் கண்டு) தந்தாமைப் பேணுவார்க்கு உடம்பு கொடுத்திருக்கும் அவனைக் கண்டு. "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்றத்தைத் தவிர்ந்து, பழைய உறவு கொண்டாடி யிருக்கிறவனைக் கண்டு.

விளக்கம் – (மாமதுவார் தண்டுழாய் முடி) - இங்கு உள்ள மதுவும், அங்கு சேர்ந்து உள்ளதால், இரண்டு மடங்காக இருக்கும் அல்லவோ? முதன்மையான மதுவும் அதுவே ஆகும். பிரிவிலும் சேர்க்கையிலும் ஒரே போன்று உள்ளவனை நீங்கள் கண்டு. (வானவர் கோனைக் கண்டு) - அவன் இங்கு வந்து விட்டால், தங்களுடைய அனுபத்திற்குத் தடை ஏற்படும் என்று எண்ணியபடி உள்ள அங்கிருப்பவர்களுக்குத் தனது திருமேனியை அளித்து நிற்பவனைக் கண்டு; இதற்கான ப்ரமாணம் யுத்தகாண்டம் (41-4)- த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம – நீ சிறிது ஆபத்து அடைந்தாய் என்றாலும், ஸீதையால் எனக்கு என்ன பயன் - என்ற எண்ணங்களைத் தவிர்த்து, பழைய உறவுகளைக் கொண்டாடியபடி உள்ளவனைக் கண்டு.

வ்யாக்யானம் - (யாம்) ஸாபராதனாகையாலே தன் குற்றத்தை யநுஸந்தித்து, ஓலக்கமிருக்கிறானாகப் பராக்கடித்து அநபிபவநீயனாயிருக்கும்; முதன்மை கண்டு கூசாதே நின்று நம்மைக் காணுமென்பது. இப்படி ஸம்போதித்தவாறே முகம் பார்க்க வேண்டி வரும்; அவன் பார்த்த முகம் மாறுவதற்கு முன்னே, இதுவோ

தக்கவாறு என்பது. “ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:” என்று சிலர்க்குச் சொல்லி வைத்தீரே. “நைவதம்சாந்நமசகாந்”, “ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே” என்றவையெல்லாம் வடிவிலே கண்டோமிறே. (இதுவோ தக்கவாறு) ஸ்த்ரீ வதம் பண்ணி வளையம் வைத்து ஓலக்கங் கொடுத்திருக்கையோ தக்கோர்மையாவது?

விளக்கம் – (யாம்) - என்னைத் தவிர்த்து விட்டுச் சென்ற குற்றம் கொண்டவனாக உள்ளதால், தனது அந்தக் குற்றத்தை எண்ணியவனாக, சபையில் உள்ள தனது நிலையைப் பயன்படுத்திக் கொண்டவனாக, உங்களால் நெருங்குவதற்கு இயலாதபடியாக நின்று, உங்களைக் காண்பான். இவ்விதம் உரையாடும்போது, முகத்தைக் காணும் நிலை ஏற்படும். அவன் உங்களைப் பார்த்த தனது முகத்தைக் திருப்பிக் கொள்வதற்கு முன்பாக, “இது தகுந்ததோ” என்று நீங்கள் கேட்கவேண்டும். ஆனால் அவன் இரக்கம் கொண்டவன் என்பதை இவள் எவ்விதம் அறிந்தாள் என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார். ஸுந்தரகாண்டம் (38-41) - ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: - [சீதை ஹனுமான் மூலமாக இராமனுக்குக் கூறுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது] தயை காண்பித்தல் என்பது மிகவும் உயர்ந்த தர்மம் என்று தாங்கள் கூற, நான் கேட்டுள்ளேன் -என்பது காண்க. அதாவது, இப்படியாகப் பிராட்டிக்கு நீவிர் உரைத்தீரோ? “தக்கவாறு” என்பதை அவனுடைய இயல்பாகக் கொண்டு, “மாமதுவார் துழாய்முடி” என்பதை ஆராய்ந்து, உமது காதல் தன்மை என்பதன் இயல்பு இதுதானோ என்கிறாள்; அதாவது ஸுந்தரகாண்டம் (36-42) – நைவ தம்சாந் ந மசகாந் - (ஹனுமான் சீதையிடம் கூறுதல்) இராமன் தங்களிடம் மட்டுமே தனது மனதை வைத்துள்ளதால், தனது திருமேனியிலிருந்து ஈக்களையும், கொசுக்களையும், புழுக்களையும், மலைப்பாம்புகளையும் கூட விரட்டுவதில்லை – என்றும், ஸுந்தரகாண்டம் (36-42) - ந மாம்ஸம் ராகவோ புங்க்தே நசாSபி மது ஸேவதே – (ஹனுமான் சீதையிடம் கூறுதல்) இராமன், பழங்களில் உள்ள சதை பாகங்களையும் உண்பதில்லை, தேனையும் பருகுவதில்லை - என்றும் உள்ள அனைத்து இயல்புகளையும் உமது வடிவத்தில் கண்டோம். (இதுவோ தக்கவாறு) - இவ்விதம் ஒரு பெண்ணைத் துன்புறுத்தி, தலையில் துளசி மாலையைச் சூட்டியபடி சபையில் காட்சி கொடுத்தபடி அமர்ந்திருப்பதோ உமக்குத் தக்க செயலாக உள்ளது?

வ்யாக்யானம் - (என்ன வேண்டுங் கண்டீர்) இவ்வோலக்கத்தையும் இவன் மேன்மையையுங் கண்டு "இத்தையெங்ஙனே யழிக்கும்படி" என்று நீங்கள் ஆந்ருசம்ஸ்யங் கொண்டாடவொண்ணாது; அவ்வளவில் என்னைப் பார்த்துச் சொல்லுங்கோள். (நுங்கட்கே) அவனல்லாத உங்களுக்கு இத்தனையும் செய்யவேணும். இல்லையாகில், இவ்வளவிலே முகங் காட்டின உங்களுக்கும் அவனுக்கும் வாசியில்லை. (நுங்கட்கே) என் முல்லைகள் மேல் தும்பிகளன்றோ! உங்கள் ஜீவநம் நீங்களே நோக்கிக் கொள்ளவேணும்: அவன் ஸ்த்ரீ வதம் பண்ணி ஸ்வரூப ஹாநி பாராதேயோலக்கங் கொடுத்திருந்தான்; நான் பாடோடிக் கிடந்தேன்; இனி உங்கள் ஸ்வரூப ஹாநி நீங்களே பரிஹரித்துக் கொள்ளுங்கோள்.

விளக்கம் - (என்ன வேண்டுங் கண்டீர்) – "என்னுங்கோள் - என்று அவனைக் கேளுங்கள்" என்று கூறாமல், "என்ன வேண்டும்" என்பது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார்; இந்தச் சபையையும், இவனுடைய மேன்மையையு நீங்கள் கண்டு, "இதனை எப்படி நாம் அழிக்க முடியும்?", என்று நீங்கள் அவன் விஷயத்தில் கருணை கொள்ளக்கூடாது; எனது நிலைமையைச் சற்று எண்ணிப் பார்த்து, நான் கூறியபடி அவனிடம் உரைப்பீர்களாக. (நுங்கட்கே) - என்னுடன் கலந்த பின்னர் என்னை விட்டுப் பிரிந்து சென்ற அவனைக் காட்டிலும், எனது பிரிவாற்றாமையில் வந்து எனக்கு முகம் காண்பித்த உங்களுக்கு இத்தனையும் அவன் செய்தே தீரவேண்டும். இல்லையெனில், இப்படியாக வந்து முகம் காண்பித்த உங்களுக்கும், முகம் காண்பிக்காத அவனுக்கும் வேறுபாடு இல்லை அல்லவோ? (நுங்கட்கே) - எனது முல்லைகள் மீது வசிக்கும் தும்பிகள் அல்லவோ நீங்கள்? நான் பிழைத்தால் அல்லவோ முல்லைகள் பிழைத்து, நீங்களும் பிழைக்க இயலும்; ஆகவே உங்கள் வாழ்க்கையை நோக்கிக் கொள்ளுங்கள். அவன் ஒரு பெண்ணைத் துன்பத்தில் ஆழ்த்தி, அதனால் தன் ஸ்வரூபத்திற்கு ஏற்பட்ட தாழ்வை ஆராயாமல், சபையில் முகம் கொடுத்தபடி உள்ளான்; நான் ஒரு புறமாகக் கிடந்து தவிக்கிறேன்; உங்களுடைய ஸ்வருபத்திற்குத் தாழ்வு ஏற்படாதபடி நீங்கள் தகுந்த செயலைச் செய்வீர்களாக.

6-8-5. நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின் யான் வளர்த்த கிளிகாள்
வெம் கண் புள் ஊர்ந்து வந்து வினையேனை நெஞ்சம் கவர்ந்த
செங்கண் கருமுகிலைச் செய்ய வாய்ச் செழுங் கற்பகத்தை
எங்குச் சென்றாகிலும் கண்டு இதுவோ தக்கவாறு என்மினே

பொருள் - என்னை விட்டுப் பிரிந்து சென்று அவனுடைய கூட்டம் போன்று செருக்கு கொள்ளாமல், நான் வளர்க்க வளர்த்த கிளிகளே! என்னை விடாமல வருவீர்களாக! உங்களை வளர்த்த காரணத்தால் பயன் பெறப் போகும் நான், “நான் இருந்தால் நீங்களும் உண்டு” என்றுள்ள உங்களுக்கு, நீங்களே அறிந்து செய்யவல்ல செயலை உரைக்கிறேன். விரோதிகள் எரிந்து போகும்படியாகக் கண்களை விழித்துப் பார்க்கின்ற கருடனை, அந்த எம்பெருமான் தன்னுடைய வேகம் வெளிப்படும்படி நடத்திக் கொண்டு என்னிடம் வந்து, இன்று நான் அவனைப் பிரிந்திருக்கக் காரணமாக உள்ள பாபங்களைக் கொண்ட என்னை, நான் அறியாதபடி எனது சித்தத்தை அபகரித்தவனாக; இவ்விதம் அபகாரம் செய்வதற்குக் காரணமாக உள்ள சிவந்த திருக்கண்களையும், அதற்குச் சேரும்விதமாக “பொன்மலை” என்பதாக உள்ள கருடனுடைய திருத்தோள்களில் பொருந்தி நிற்கும் மழை மேகம் போன்ற ரூபம் கொண்டவனாக; தான் எண்ணியதைச் செய்ய முடிந்த ப்ரீதியால் சிவந்த அழகான வாயைக் கொண்டவனாக; இந்த அழகை நான் அனுபவிப்பதைச் செய்யும் செயலைத் தன்னுடைய பேறாகக் கொள்கின்ற மேன்மையான கற்பகம் போன்று தாராள குணம் கொண்டவனாக உள்ள அவனை, பரம் வ்யூஹம் விபவம் என்பதாக எந்த ஒரு நிலையில் நின்றிருந்தாலும் கண்டு, “இவளுடைய சித்தத்தை அபகரித்துத் தனிமைப்படுத்திய இது உனக்குத் தகுதியான செயலோ”, என்று கேட்பீர்களாக.

அவதாரிகை - தன்னுடைய கிளிகளைக் குறித்து எங்கேனும் அவனைக் கண்டு, இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி என்னுங்கோளென்கிறாள்.

விளக்கம் - தனது கிளிகளை நோக்கி, “எங்கு சென்றாவது நீங்கள் அவனைக் கண்டு, உம்முடைய தகுதி உள்ளது எப்படியோ என்று கேட்பீர்களாக”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (நுங்கட்குயானுரைக்கேன்) தனக்கு முன்னே ஆற்றாமையோடேயிறே அவை யிருக்கிறது; ஆருக்குச் சொல்லும் வார்த்தையை யாருக்குச் சொல்லுகிறது? ஆற்றாமை சொல்லுவியாதது இல்லையிறே. (நுங்கட்கு யானுரைக்கேன்) உங்களுக்குச் சொல்லுமதல்ல; நான் சொல்லுமதல்ல. வ்யஸநத்துக்கு அபிமாநிகளிருக்க, வேறே சிலர் வார்த்தை சொல்லுமாபோலே.

விளக்கம் - (நுங்கட்குயானுரைக்கேன்) - யாருக்குக் கூறவேண்டிய சொற்களை யாரிடம் கூறுகிறாள்! அதாவது எனது பிரிவாற்றாமையைக் கண்டு எனது விஷயத்தில் ஈடுபடாமல் நிற்பவர்களை நோக்கிக் கூறும் சொற்களை, அவ்விதம் ஆற்றாமையால் நிற்கும் உங்களிடம் கூறவேண்டுமோ? இவள் கூறுவது போன்று இவ்விதம் இந்தக் கிளிகளுக்கு பிரிவாற்றாமை உள்ளதோ என்றால், இவளுக்கு முன்பாக இந்தக் கிளிகள் பிரிவாற்றாமையில் உள்ளன. சரி, அப்படியானால் இவற்றை ஏன் கூறவேண்டும் என்றால், பிரிவாற்றாமையானது சொல்ல வைக்காத சொற்களே இல்லை என்பதால் ஆகும். (நுங்கட்குயானுரைக்கேன்) - "யாருக்குக் கூற வேண்டிய சொற்களை யாரிடம் கூறுகிறாள்" என்பதை இங்கு சேர்த்துக் கொண்டு, "யான் உரைக்கேன்" என்பதை விளக்குகிறார்; இந்தச் சொற்கள் நான் உங்களுக்குக் கூறுவது அல்ல, அவனுக்கு உரைக்கிறேன்; மேலும் இவை என்னுடைய சொற்கள் அல்ல, உங்கள் ஆற்றாமையால் நீங்கள் அவனிடம் கூறுபவை ஆகும். தளர்வுக்கு ஏற்ற சிலர் உள்ளபோது, மற்றவர்கள் தளர்ச்சி குறித்துக் கூறுவது போன்றதாக உள்ளது.

வ்யாக்யானம் - (வம்மின்) "இவளை ஜீவிப்பித்தோமாம் விரகேதோர்" என்று சிந்திக்கிற உங்களுக்கு ஒரு விரகு சொல்ல வாருங்கோள். (யான் வளர்த்த கிளிகாள்) என் வயிற்றிலே பிறந்த உங்களுக்கு அவன் பரிகரம் போலே செருக்கடித்திருக்கக் காலமுண்டோ? செருக்கடித்திருக்கப் பிறந்திகோளோ! (நுங்கட்கு) "ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ" என்றிருக்கிற உங்களுக்கு. (யான்) உங்கள் மேலே என் ஸர்வபரங்களையும் வைத்திருக்கிற நான். (உரைக்கேன்) நீங்களறியாததுண்டாயச் சொல்லுகிறேனல்லேன்; ஆற்றாமையாலே சொல்லுகிறேன். (வம்மின்) முன் கை முக்காதமாய் இருக்கிறபடி. (யான் வளர்த்த) "நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடும் ஊட்டி" வளர்த்த. (கிளிகாள்) "வளர்த்ததனால் பயன் பெற்றேன்" என்கிறபடியே, அவன் திருநாமங்களை நீங்கள் சொல்லக் கேட்டிருக்கவும் அமையுமிறே; அதுதானே "கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்" என்கிறபடியே, ஆற்றாமைக்கு உடலாகையிறே யுங்களை அவன்பக்கல் போகவிடத் தேடுகிறது.

விளக்கம் – (வம்மின்) - ஆனால் கிளிகள், இவளுடைய தளர்வை அறிந்து தாங்களாகவே இவளுடைய கார்யத்தைச் செய்யும் என்றுள்ளபோது, இவள் ஏன் "வம்மின் – வருவீர்களாக" என்று அழைக்கவேண்டும் என்பதற்கு விடை

கூறுகிறார்; "இவளைப் பிழைக்குபடிச் செய்ய என வழி?", என்று ஆராய்ந்தபடி உங்களுக்கு ஒரு வழியை நான் கூறுகிறேன், வருவீர்களாக. (யான் வளர்த்த கிளிகாள்) - என்னால் வளர்க்கப்பட்ட உங்களுக்கு, அவனுடைய கூட்டமான கருடன் முதலானவை போன்று, செருக்கு கொள்ள இயன்றதோ? இவ்விதம் செருக்குடன் இருப்பதற்காகவோ நீங்கள் பிறந்தீர்கள்? (நுங்கட்கு) – கிஷ்கிந்தாகாண்டம் (5-18) - ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ - துக்கம் மற்றும் சுகம் ஆகியவை நமக்கு சமமே ஆகும் - என்றபடி உள்ள உங்களுக்கு. (யான்) - உங்கள் மீது எனது அனைத்து பாரங்களையும் வைத்துள்ள நான். (உரைக்கேன்) - நீங்கள் அறியாத விஷயங்கள் என ஏதும் உள்ளதாக எண்ணி நான் கூறவில்லை; நீங்கள் அனைத்தும் அறிவீர்கள்; எனது பிரிவாற்றாமையால் கூறுகிறேன். (வம்மின்) - ஆனால் கிளியானது இவளுடைய முன் கையில் அல்லவோ அமர்ந்துள்ளது; இப்படி உள்ளபோது "வம்மின்" என்று ஏன் அழைக்கவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; பிரிவாற்றாமை காரணமாக முன் கையானது மூன்று காத தூரத்தில் உள்ளதாகத் தோன்றியது. (யான் வளர்த்த) – "நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடும் ஊட்டி" என்பதற்கு ஏற்ப ஊட்டி வளர்த்த கிளிகள். திருநெடுந்தாண்டகம் (14) - வளர்த்ததனால் பயன் பெற்றேன் - என்பதற்கு ஏற்ப, அவன் திருநாமங்களை நீங்கள் கூறுவதைக் கேட்டபடி இருந்தாலே போதுமானது என்றால், அங்கு செல்லும்படி ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார். திருவாய்மொழி (9-5-8) - கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர் - என்பதற்கு ஏற்ப, அவனுடைய திருநாமம் அல்லவோ பிரிவாற்றாமைக்குக் காரணம் என்றாகிறது. ஆகையால் அல்லவோ உங்களை அங்கு போக விடுகிறேன்.

வ்யாக்யானம் - (வெங்கட்புள் இத்யாதி) வெவ்வியதான கண்ணையுடைத்தான புள்ளை நடத்திக் கொண்டு வந்து. வருகிறபோதே வழியில் ப்ரதிபந்தகங்களைப் போக்குகையிலே சினத்த கண்ணையுடையவன். என்னுதல். அன்றியே, பிரித்துக் கொண்டு போகிறபோது கண்பாராதே பிரித்துக் கொண்டு போன கொடுமையைச் சொல்லுதல். "அக்ரூர க்ரூர ஹ்ருதய:" என்னுமாபோலே. (வெங்கட் புள்ளூர்ந்து வந்து) பட்டங் கட்டின ஆனையிலேயேறி அபிமத விஷயத்தைக் கிட்டும் ராஜபுத்ரனைப்போலே. "அருளாழிப்புட்கடவீரவர் வீதியொருநாள்" என்றிறே அடியில் தூது விட்டது, அப்படியே வந்தபடி.

விளக்கம் - (வெங்கட்புள் இத்யாதி) - சிவந்த கண்கள் கொண்ட கருடப் பறவையை நடத்திக் கொண்டு வந்து. கருடனுடைய கண்களில் உள்ள உஷ்ணத்திற்கான காரணத்தை அடுத்துள்ள இரண்டு வாக்கியங்களில் கூறுகிறார். அதாவது கருடன் வரும்போதே, வழியில் உள்ள அனைத்து விரோதிகளையும் போக்குவதற்காகச் சினத்துடன் கூடிய கண்களைக் கொண்டவன். அல்லது இவளிடமிருந்து அவனைப் பிரித்துக் கொண்டு சென்றபோது, கண்களை ஆராயாமல், பிரித்துக் கொண்டு சென்ற கொடுமையைக் கூறுகிறார் எனலாம். இதற்கு உதாரணம் ஸ்ரீவிபு. (5-18-30) - அக்ரூர: க்ரூர ஹ்ருதய: - க்ருஷ்ணனை அக்ரூரர் மதுராவிற்கு அழைத்துச் சென்றபோது கோபியர்கள், "கொடிய மனம் கொண்ட அக்ரூரர்" – என்பது போன்று இவளும் க்ருஷ்ணனைக் குறித்து கூறுகிறாள். (வெங்கட் புள்ளூர்ந்து வந்து) – அடுத்து, "புள்ளூர்ந்து வந்து நெஞ்சம் கவர்ந்த" என்று சேர்த்துப் பொருள் கொள்கிறார்; பட்டம் கட்டிய யானையில் ஏறிச் சென்று தனது காதலியைக் காண்கின்ற ராஜபுத்திரன் போன்று. ஆனால் கருடன் மீது ஏறி வரவேண்டுமோ என்றால், திருவாய்மொழி (1-4-6) – அருளாழிப்புட்கடவீரவர் வீதியொருநாள் – என்று அல்லவோ முன்பு தூதுவிட்டாள், அது போன்றே இங்கும் கொள்கிறாள்.

வ்யாக்யானம் - (வினையேனை) அவனைப்போலே இரண்டு நெஞ்சு படைக்கப் பெறாத பாபத்தைப் பண்ணினேன்; ஸம்ச்லேஷத்தில் அழிகைக்கும், விச்லேஷத்தில் தரிக்கைக்கும் இரண்டு நெஞ்சுண்டாகப் பெற்றிலேன் (நெஞ்சங் கவர்ந்த) நாட்டார்க்கு மநோ விகாஸ ஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே! ஸாரக்ராஹியாய்க் கோதையிட்டு வைத்துப் போனான்; பூக்கொண்டு புட்டில் பொகடுவாரைப் போலே. அறமணத்திறே இவர் நெஞ்சிருப்பது; "பூசும் சாந்தென்னெஞ்சம்" என்னும்படி.

விளக்கம் – (வினையேனை) - அவனைப் போன்று இரண்டு மனம் படைக்க பெறாத பாபம் செய்தேன். அதாவது சேர்கையின்போது அழிவதற்கும், பிரியும்போது பிழைத்திருப்பதற்கும் என்பதாக இரண்டு நிலைகளில் உள்ள நெஞ்சம் எனக்கு இல்லை. (நெஞ்சம் கவர்ந்த) - உலகில் உள்ள அனைவருக்கும் அவர்களுடைய மனதை மலரும்படிச் செய்யும் விஷயமானது எனது நெஞ்சத்தை அழிக்கும்படியாக உள்ளதே! ஆனால் சரீரத்தை விட்டு மனத்தினை ஏன் கவரவேண்டும் என்பதைக் கூறுகிறார்; சாரத்தை எடுத்துக் கொண்டு மாலையை

விட்டுச் சென்றான்; அதாவது, மாலையை எடுத்துக் கொண்ட பின்னர், அவற்றை வைக்கும் பெட்டியை விட்டுச் செல்பவர்கள் போன்று செய்தான். இவருடைய மனமானது மலர் என ஆவதற்குக் காரணமும் ப்ரமாணமும் கூறுகிறார்; திருவாய்மொழி (4-3-2) - பூசும் சாந்தென்னெஞ்சம் – என்பது காண்க.

வ்யாக்யானம் - (செங்கட் கருமுகிலை) கண்ணாலே குளிர நோக்கி, வடிவை முற்றூட்டாக்கி நின்ற நிலை. அங்ஙனன்றிக்கே, இத்தலையோடே வந்து கலந்த பின்பு, அத்தலைக்கு வந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லவுமாம். அன்றிக்கே, பிரிவை ப்ரஸங்கித்துக் கண்ணாலே குளிர நோக்கி, அவன் விளைநீரடைத்துக் கொண்டு நின்றபடியாகவுமாம். (செய்ய வாய்) சாடுசதங்கள் சொல்லப்புக்கு ஸ்மிதம் பண்ணுகிற வாய். (செழுங்கற்பகத்தை) விலக்ஷணமான கல்பகத்தை. வைலக்ஷண்யமாவது தானேயபேக்ஷித்துத் தன்னைக் கொடுக்கை. கல்பகம் தன்னைக் கொடுக்கமாட்டாதே அபேக்ஷிக்கவும் மாட்டாதே; இவன் தன்னைக் கொடுக்க வல்லவனிறே. தான் கடக்கவிருந்தாலும் தன் விபூதி த்வயத்தையும் நான் நினைத்தார்க்குக் கொடுக்கும்படி எனக்குத் தந்தவனை.

விளக்கம் - (செங்கட் கருமுகிலை) - தனது திருக்கண்களால் குளிர நோக்கி, தனது வடிவத்தை முற்றிலும் அனுபவிக்கும்படிச் செய்து நிற்கும் நிலை. அல்லது இவளுடன் வந்து கலந்த பின்னர் அவனுக்கு ஏற்பட்ட நிறைவைக் கூறுவதாகவும் கொள்ளலாம். அல்லது, பிரிவினைக் குறித்து உரைத்து, திருக்கண்களால் உற்று நோக்கி, அவன் விளைநீர் அடைந்தபடி நின்ற நிலை என்றும் கொள்ளலாம். (செய்ய வாய்) - நூற்றுக்கணக்காண புனைக்கதைகளைக் கூறுவதற்காக புன்முறுவல் செய்தபடி உள்ள திருவாய். (செழுங்கற்பகத்தை) - வேறுபட்ட கற்பகத்தை. வேறுபாடு என்னவென்றால் தானே விரும்பி தன்னை அளித்தல்; கற்பகமானது தானே தன்னைக் கொடுக்கவும் செய்யாது, விரும்பவும் செய்யாது. இவன் தன்னையே அளிப்பவன் அல்லவோ? “செழுங்கற்பகம்” என்பதற்கு, “சேர்ந்துள்ள காலத்தில், தானே விரும்பித் தன்னையே கொடுப்பவன்” என்று பொருள் கூறினார்; பிரிந்துள்ள நிலையில் இரண்டு உலகங்களையும் நான் எண்ணியபடி மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏதுவாக, அவற்றை எனக்கு அளித்தவன் என்று மற்றொரு பொருளையும் “செழுங்கற்பகம்” என்பதற்குக் கூறுகிறார்; தனது இரண்டு விபூதிகளையும், தான் பிரிந்து சென்றபோதிலும் நான் எண்ணியவர்களுக்குக் கொடுக்கலாம்படி எனக்கு அளித்தவன்.

வ்யாக்யானம் - (எங்குச் சென்றாகிலுங் கண்டு) "வானவர்கோனை" என்றதிறே. "ஆள் வாராநின்றது" என்று கேட்டு ஓலக்கத்தைக் கிளப்பாக் கடக்கப் போய்த் திரைவளைத்துக் கொண்டிருப்பர். அன்றிக்கே, புகை புக்க விடமெங்கும் புகுங்கோள்; பர வ்யூஹ விபவார்ச்சாவதாரங்கள்; "யமாத்மா ந வேத" என்றொளித்திருக்கும் இடமெங்கும் புக்கு. "அநேநைவஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம்" என்கிறபடியே. "பரமபதத்தில் கண்டிலோம்" என்று மீளவொண்ணாதே.

விளக்கம் - (எங்குச் சென்றாகிலுங் கண்டு) - "எங்குச் சென்றாகிலும்" என்பதற்கு இரண்டு விதங்களில் பொருள் கூறுகிறார். "ஆள் வாராநின்றது" என்று தொடங்கி முதல் விதம், "அன்றிக்கே" என்று தொடங்குவது இரண்டாவது விதம் ஆகும். இவற்றில் முதல் விதம்: அவன் பரமபதத்தில் உள்ள சபையில் இல்லாமல், தனது அந்தப்புரத்தில் இருந்தாலும், அங்கு சென்றாலும் உரைப்பீர்களாக. அடுத்து இரண்டாவது விதம்: ஈச்வர ஸம்பந்தம் உள்ள இடங்கள் அனைத்திலும் நோக்குங்கள்; அதாவது பர வ்யூஹ விபவ, அர்ச்சாவதாரங்கள். உபநிஷத்தில் - யமாத்மா ந வேத - அந்தப் பரமாத்மா தனது ஆத்மாவாக உள்ளதை ஜீவாத்மா அறிவதில்லை - என்பதாக, அவன் ஒளிந்திருக்கும் அனைத்து இடங்களிலும் தேடுங்கள். ஸுந்தரகாண்டம் (1-40) - அநேநைவஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம் - இலங்கையில் ஜானகியைக் காண இயலவில்லை என்றால் ஸ்வர்க்கலோகமும் செல்வேன் - என்று அனுமன் கூறியது போன்று, பரமபதத்தில் அவனைக் காணவில்லை என்றால் நீங்கள் திரும்பாமல், அவன் உள்ள அனைத்து இடங்களுக்கும் அனுமன் போன்று நீங்களும் செல்ல முயலவேண்டும்.

வ்யாக்யானம் - (இதுவோ தக்கவாறென்மினே) ஸ்தாந பேதம் உண்டானாலும் பாசுரமிதுவே. பிறர் நெஞ்சையும் அபஹரித்துத் தன்னெஞ்சையுங் கொண்டு கடக்கவிருக்கையோ தக்கோர்மையாவது? அவனுக்கு ஆந்ரும்ஸ்யமில்லை யென்கையாவது தர்மியை யில்லையென்கையிறே. தர்ம்யநுப்ரவிஷ்டையான க்ருபையும் எங்கள் பக்கல் காணாமையாலே தமக்கு அதுவுமில்லையென்று சொல்லுங்கோள். நீர்மை கொண்டாடியிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தையே சொல்லுங்கோள்.

விளக்கம் – இவள் கூறியதைக் கேட்ட கிளிகள், "அவன் உள்ள இட வேறுபாடு காரணமாக, நாங்கள் கூற வேண்டிய சொற்களில் ஏதேனும் வேறுபாடு உள்ளதோ?", என்பதற்கு விடை அளிக்கிறார். (இதுவோ தக்கவாறென்மினே) - அவ்விதம் இடத்தில் வேறுபாடு இருந்தாலும், நீங்கள் கூறவேண்டியவை, "மற்றவர்கள் மனத்தையும் கவர்ந்து, தனது மனத்தையும் அவர்களிடமிருந்து திசை திருப்பியபடி இருப்பது உமக்குத் தகுந்ததோ?", என்பதாகும். அவனுக்கு க்ருபை இல்லை என்று கூறுதலானது, அவன் ஸர்வேச்வரனே இல்லை என்று கூறுவதாகும் அல்லவோ? இவ்விதம் தர்மத்தைக் கொண்டவனிடம் எப்போதும் உள்ளதான அந்தக் கருணையும் எங்கள் விஷயத்தில் காணாமல் உள்ளதால், உமக்கு அதுவும் இல்லை என்று கூறுவீர்களாக. நீர்மையை மட்டுமே அல்லாமல், வேறு மர்மமான செய்தி ஏதும் இல்லை; இதனையே கூறுவீர்களாக.

6-8-6. என் மின்னு நூல் மார்வன் என் கரும் பெருமான் என் கண்ணன்
தன் மன்னு நீள் கழல் மேல் தண் துழாய் நமக்கு அன்றி நல்கான்
கன்மின்கள் என்று உம்மை யான் கற்பியா வைத்த மாற்றம் சொல்லி
செல்மின்கள் தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே

பொருள் – நான் உங்களுடைய செயலைச் செய்யவேண்டியதாக உள்ளபோது, உங்கள் மூலமாக எனது செயல்களை நான் செய்து கொள்ள வேண்டும்படியான க்ரூரமான பாபம் கொண்ட நான் வளர்த்த, ஏதும் அறியாத பூவைகளே! தனது திருமேனியின் நிறத்திற்குச் சேரும்படியாக, மின்னல் போன்று விளங்குகின்ற பூணூலைக் கொண்ட தனது திருமார்பை நான் அனுபவிக்கும்படிச் செய்பவனும்; இத்தகைய ஒரு உறுப்பு மட்டும் அழகுடன் அல்லாமல், கூட்டமாக உள்ள அனைத்தும் கறுத்த நிறத்துடன் கொண்டதான திருமேனியை நான் அனுபவிக்கும்படிச் செய்து, என்னைத் தனக்கு அடிமை என்று கொண்ட ஸ்வாமியாக உள்ளவனும்; அனைத்துவிதங்களிலும் என்னால் தன்னை நியமிக்கும்படி எனக்கு பவ்யமாக உள்ளவனும் ஆகிய க்ருஷ்ணன், தன்னுடைய அடியார்களாக உள்ள இடம் முடியச் செல்லும் தனது திருவடிகளின் மீது உள்ளவையும், களப்பை ஆற்றவல்லவையும் ஆகிய துளசியை நமக்கு அல்லாமல் வேறு யாருக்கும் மகிழ்ந்து தரமாட்டான். "கற்றுக் கொள்ளுங்கள்" என்று உங்களை, நிர்ப்பந்தம் செய்து உங்கள் மூலமாக எனது செயலை நிறைவேற்றிக்கொள்ள முயலும் நான், "என் மின்னு" என்பது தொடங்கி, "நல்கான்"

என்பது முடிய உள்ள விஷயங்களை உங்களுக்குக் கற்பித்தேன்; இந்தச் சொற்களை உரைத்தபடி நீங்கள் செல்லுங்கள்.

அவதாரிகை - ஆச்ரிதரோடு ஏகரஸனாகையால் நம் அபேக்ஷிதங்கள் செய்யுமவன் பாடேசென்று, இதுவோ தக்கவாறென்னுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

விளக்கம் - அடியார்களுடன் நன்கு கலந்து பழகுபவன் என்பதால், நம்முடைய விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் அவனிடம் நீங்கள் சென்று, "இது உமக்குத் தகுந்த செயலோ" என்று கேளுங்கள் என்பதாகச் சில பூவைகளிடம் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (என் மின்னு நூல் மார்வனித்யாதி) தன் திருமேனியிலே சாத்தச் செய்தே என்னெஞ்சிலே இட்டாற்போலே ப்ரகாசிக்கிற திருயஜ்ஞோபவீதத்தைக் காட்டி என்னையநந்யார்ஹை யாக்கினவன். என் சரக்கானவன் கடக்கவிருக்குங்காட்டில் என் சரக்கைப் பிறர்க்காக்குமோ? (என் மின்னு நூல் மார்வன்) திருயஜ்ஞோபவீதத்திலழகை ஸ்மரிப்பித்து என்னெஞ்சில் இருளை யறுத்தவன். தன் திருமார்வில் சாத்தின நூலைக் காட்டி என்னை நூலிலே வரப் பண்ணினான். (என் கரும்பெருமான்) மேகத்திலே மின்னினாற்போலே அந்தத் திருயஜ்ஞோபவீதத்துக்குப் பரபாகமான வடிவை எனக்காக்கி என்னையடிமை கொண்டவன்.

விளக்கம் - (என் மின்னு நூல் மார்வனித்யாதி) - தனது திருமேனியில் யஜ்ஞோவீதத்தை அணிந்திருந்தாலும், எனது மனத்தில் இட்டது போன்று ப்ரகாசத்துடன் உள்ளதைக் காண்பித்து, என்னைத் தனக்கு மட்டுமே என்று ஆக்கிக் கொண்டவன். எனக்கு என்று உரியவன், எனக்கு மட்டுமே உள்ளதான துளசியை வேறு யாருக்கும் அளிப்பானோ? (என் மின்னு நூல் மார்வன்) - தனது யஜ்ஞோவீதத்தின் அழகைக் காண்பித்து, எனது நெஞ்சத்தில் உள்ள இருளை அழித்தவன். தனது திருமேனியில் உள்ள நூலைக் காண்பித்து, என்னை சாஸ்த்ர நூல்களின் வழி வரச்செய்தவன். (என் கரும்பெருமான்) - கருமேகத்தில் மின்னல் தோன்றியது போன்றுள்ள அந்தத் யஜ்ஞோபவீதத்திற்கு ஏற்றதொரு நிறம் கொண்ட வடிவத்தை, எனக்கு என்று ஆக்கி வைத்து, என்னை அடிமை கொண்டவன்.

வ்யாக்யானம் - (என் கண்ணன்) இப்படிகளாலே என்னைச் சேர்த்துத் தன்னை எனக்காக்கினவன். “என், என், என்” என்று பதங்கள்தோறும் சொல்லுகையாலே ஒப்பனையழகிலும், வடிவழகிலும், ஸௌலப்யத்திலும் தனித்தனியே ஈடுபட்டபடி. (தன் மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்) எல்லாஞ் செய்தாலும், “பக்தாநாம்” என்றிருக்கிறத்தைப் பிறர்க்கு ஆக்கான். இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டிறே இது. ஆச்ரித பரதந்த்ரனாகையாலே, “ஆச்ரிதர்க்கு ஸ்வம்மான பின்பு அறிவிக்கவரும்” என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூது விடுகிறதிறே.

விளக்கம் - (என் கண்ணன்) - இப்படியாக உள்ள ஒப்பனை அழகு, வடிவழகு போன்ற பலவற்றாலும் என்னைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, தன்னை எனக்கு என்று ஆக்கியவன். "என், என், என்” என்று தனித்தனியே கூறுவதால் ஒப்பனை அழகு, வடிவழகு, யௌவனம் போன்றுள்ள அனைத்திலும் தனித்தனியே ஈடுபட்டவள் என்றாகிறது. (தன் மன்னு நீள் கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்) - இவள், தன்னை உதாஸீனம் செய்துள்ளவனை, “நமக்கு அன்றி நல்கான்” என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; அனைத்தும் செய்தாலும், ஜிதந்தே (5) - பக்தாநாம் – அவனுடைய திருமேனி அவனுடைய அடியார்களுக்காகவே உள்ளது - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதை, மற்றவர்களுக்கு அளிக்கமாட்டான் என்பதால் “நமக்கு அன்றி நல்கான்” என்றாள். இந்தத் திருவாய்மொழிக்கு நிதானமான பாசுரம் அல்லவோ இது! அவன், தனது அடியார்களுக்கு மட்டுமே வசப்பட்டவன் என்பதால், "அடியார்களுக்கு செல்வம் என்றான பின்பு அறிவிக்கவரும்" என்று அத்தகைய நிலையைக் கருத்தில் கொண்டு தூது விடுகிறார்.

வ்யாக்யானம் - (தன் - நீள்கழல்மேல் – மன்னு - தண்டுழாய் நமக்கன்றி நல்கான்) போக்கியதையளவிறந்த திருவடிகளிலே பொருந்தி ச்ரமஹரமான திருத்துழாயை ஸர்வதா பிறர்க்கு ஆக்கான். “மயி ஜீவிதமாயத்தம் ராகவஸ்ய மஹாத்மா:” தம்மையும் தம்முடைமையையும் எனக்காக்கினவர். இதுதான் தன் ஸ்வபாவங் கொண்டு சொல்லுகிறாளல்லள்; அவர் ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே சொல்லுகிறாள்; “கிம்புநர் மத்விதோ ஜந:” என்றவிடத்துக்குச் சொல்லுவதொரு வார்த்தையுண்டிறே. அருளாளப் பெருமாளெம்பெருமானாருடைய அந்திமதசையிலே, “திருவுள்ளத்திலோடுகிறதென்?” என்ன, “ஒரு பக்ஷி

பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடியென் என்று கிடந்தேன் என்றார்” என்று; இதுக்குக் கருத்தாகப் பிள்ளையருளிச்செய்யும் வார்த்தை: “நாம் பண்ணின சரணாகதியாகையாலே பலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது; இனி சரண்யன் நீர்மையிலேற்றத்தாலே நமக்கு ஒரு குறையில்லையென்கிறது”.

விளக்கம் – (தன் - நீள்கழல்மேல் – மன்னு - தண்டுழாய் நமக்கன்றி நல்கான்) - அளவற்ற இனிமை கொண்ட தனது திருவடிகளில் நன்கு பொருந்தி, காண்பவர்களுடைய களைப்பை நீக்கவல்ல துளசியை, எந்தவிதத்திலும் மற்றவர்களுக்கு அளிக்கமாட்டான். "அவன் அடியார்கள் வசப்படவன்" என்று கூறினார்; இதற்கு ஓர் உரையாடலை ப்ரமாணமாகக் காண்பிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (37-57) - மயி ஜீவிதமாயத்தம் ராகவஸ்ய மஹாத்மா: - நீண்ட திருக்கரங்கள் கொண்ட ஹனுமானே! மஹாத்மாவாகிய இராமன், அவருடைய தம்பிகள், அரசகுலம் ஆகியவற்றின் ப்ராணன் என் வசத்தில் உள்ளது - என்றாள்; அதாவது தன்னையும், தனது உடைமைகளையும், என் உடைமை என்று ஆக்கியவன். இதனைப் பராங்குசநாயகியானவள், தனது இயல்பான ஸௌந்தர்யம் போன்றவற்றைக் கொண்டு உரைக்கவில்லை; அவனுடைய இயல்பான க்ருபை மற்றும் காதல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு உரைக்கிறாள். தனது அடியார்களுக்கு, தனது க்ருபை மூலம் அடங்கியவனாக இருப்பான் என்பதற்கு ஒரு உரையாடல் காண்பிக்கிறார்; யுத்தகாண்டம் (18-25) - கிம்புநர் மத்விதோ ஜந: – வானரங்களின் தலைவனே! அந்தப் புறாவானது தனது மனைவியை அபகரித்தவனை, தனது உயிரைக் கொடுத்துக் காப்பாற்றியது; என்னைப் போன்றவர்கள் சரணாகதி செய்பவர்களைக் காக்கவேண்டும் என்பதை மீண்டும் கூறவேண்டுமோ - என்று கூறும் சொற்கள் உள்ளது அல்லவோ? அருளாளப்பெருமாளெம்பெருமானாருடைய அந்திம நேரத்தில், அவருடைய சிந்தனையில் என்ன உள்ளது என்று கேட்டபோது, “ஒரு பறவை இராமானுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தியதே என்று எண்ணிக் கிடந்தேன்”, என்றார்; இது என்ன? விபீஷணன் இராமனிடம் சரணாகதி அடைய வந்தபோது, சுக்ரீவன் முதலானோர் தடுத்தனர். இதனைக் கண்ட இராமன், சுக்ரீவனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தபோதிலும், அனைவரும் ஒப்புக் கொண்ட பின்னரே ஏற்கவேண்டும் என்று இருந்தான். இதற்கு, தனது பெண் புறாவைக் கொல்ல வந்த வேடனிடம், அந்தப் பெண் புறாவிற்காகத் தனது உயிரை அளித்த ஓர் ஆண் புறாவின் சரிதம் கூறினான். தொடர்ந்து, “அந்தப் புறாவின் செயல் இவ்விதம்

உள்ளபோது, ரகு வம்சத்தில் வந்த எனது செயல் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? குற்றம் உள்ளவனையும் ஏற்பேன் என்று எனது வ்ரதத்தை அந்தப் புறா முன்பே செய்துவிட்டதே! இப்போது நான் அது போன்று செய்தால், அந்தப் புறா செய்ததைக் கண்டு நான் செய்தது போன்று ஆகும்", என்று எண்ணி வருந்தினான்; இதனைக் கூறினார். இதற்குக் கருத்தாக நம்பிள்ளை அருளிச்செய்வது: "நம்முடைய சரணாகதியால் நாம் பலன் பெறுவதில்லை. மாறாக, அடைக்கலம் கொடுப்பவனுடைய நீர்மையே நம்மைக் காக்கிறது", என்பதாகும்.

வ்யாக்யானம் - (நமக்கன்றி நல்கான்) தனித்து, இனியது ஆச்ரிதரையொழிய புஜிக்கமாட்டான். (கன்மின்களென்றும்மை யான் கற்பியா வைத்த) நெஞ்சொழிந்தபோது, தனக்கு தாரகமானவற்றைக் கற்பித்து வைக்கும். நம் முதலிகள் ஓரோஸந்தாநங்களாக "சிறியார், பெரியார்" என்னாதே த்வயத்தை யப்யஸிப்பித்து வைக்குமாபோலே. ரக்ஷ்யங்களான வுங்களை, ரக்ஷகையான நான். கற்பியா வைத்த – அப்யஸிப்பித்து வைத்த. (மாற்றம்) அதாகிறது "நமக்கன்றி நல்கான்" என்று எல்லாவவஸ்த்தையிலும் உங்களுக்கு நான் சொல்லி வைக்கும் அதாதல்; "இதுவோ தக்கவாரென்று சொல்லுங்கோள்" என்றதாதல்.

விளக்கம் - (நமக்கு அன்றி நல்கான்) - இனிமையானவற்றைத் தான் மட்டுமே தனியாக நின்று, அடியார்களை விலக்கி, அனுபவிக்கமாட்டான். (கன்மின்கள் என்று உம்மை யான் கற்பியா வைத்த) - ஆனால் இவளால் அந்தப் பறவைக்கு ஏற்ற விஷயங்களைக் கற்பித்துக் கொடுக்க இயலுமோ? அதாவது அதற்குக் காலம் உள்ளதோ என்பதற்கு விடை அளிக்கிறார். தனது மனம் சற்றே அமைதியாக உள்ளபோது தான் உயிர்பிழைத்திருக்க ஏற்றதாக உள்ள விஷயங்களை, அவற்றுக்கும் கற்றுக் கொடுப்பாள்; இதற்கு உதாரணம்: நம்முடைய முன்னோர்கள், "இவர்கள் சிறியவர்கள், இவர்கள் பெரியவர்கள்" என்று ஆராயாமல், ஒரே போன்று த்வயத்தை கற்றுக் கொடுப்பது போன்று ஆகும். பாதுகாக்கப்படும் பொருளாக உங்களைக் காப்பாற்றும் நான், உங்களுக்கு கற்றுக் கொடுத்தவை. (மாற்றம்) – "மாற்றம்" என்பது, "நமக்கு அன்றி நல்கான்" என்று, அனைத்து நிலைகளிலும் உங்களுக்கு நான் கூறுவதாகும். அல்லது "இது உமக்குத் தகுதியோ என்று கூறுவாயாக" என்று அவனிடம் கேட்கும்படிக் கூறுவதாகும்.

வ்யாக்யானம் - (சொல்லிச் சென்மின்கள்) வழிக்கு பாதேயங் காணுமது, அங்கே போனால் சொல்லப் பார்த்திராதே கிடிகோள். (அவனுக்கு மறுமாற்றத்துக்கு அவகாசமில்லாதபடி) போகிறபோதே சொல்லிக் கொடுபோங்கோள். (தீவினையேன்) அவை கிடக்கிடுங்கோள்; என்னுடைய பாபமிருந்தபடி பாருங்கோள், புத்ரவிக்ரயரோபாதியானேன். அவனும் நானும் கூடவிருந்து உங்களைக் கொண்டாடுகையன்றிக்கே, உங்களைக் கொண்டு கர்மங் கொள்ளும்படியான பாபத்தைப் பண்ணினேன். வயிற்றிற் பிறந்தாரை யிடுவித்து அபிமதனை யழைத்துக் கொள்ளுகையோபாதி புன்மையில்லையே.

விளக்கம் – (சொல்லிச் சென்மின்கள்) - அது உங்கள் வழிக்கு உதவியாக இருப்பதாகும். அங்கு சென்ற பின்னர் இந்தச் சொற்களை உரைக்கலாம் என்று நீங்கள் பொறுமையுடன் இருக்காமல், போகும் வழி முழுவதும் இவற்றைக் கூறியபடிச் சொல்வீராக; அதாவது அவனுக்கு மறுமொழி கூறுவதற்குக் காலம் கிட்டாதபடி, நீங்கள் இவற்றைக் கூறியபடிச் செல்லுங்கள்; அதாவது, அவனுடைய மேன்மையை நீங்கள் காணும்போது உங்களுக்கு நாக்கு எழாமல் போகலாம்; ஆகவே இங்கிருந்து கூறியபடி செல்வீராக. (தீவினையேன்) - நீங்கள் அங்கு செல்லுதல், நான் கூறிய சொற்களை அவனிடம் உரைத்தல், அதனைக் கேட்டு அவன் இங்கு வருதல் போன்றவை அனைத்தும் ஒருபுறம் இருக்கட்டும்; எனது பாபங்கள் உள்ளதைக் காண்பீர்களாக. புத்திரனை விற்கும் பாபம் செய்பவர்கள் போன்று நான் ஆனேன். அவனும் நானுமாகச் சேர்ந்துநின்று உங்களைக் கொண்டாடுவதை விடுத்து, உங்களைக் கொண்டு எனது செயலை முடிக்க வேண்டியதான பாபம் செய்துள்ளேன். வயிற்றில் பிறந்தவர்கள் மூலம் காதலனை அழைத்து வரும்படிக் கூறுவதைக் காட்டிலும் தாழ்ந்த செயல் வேறு ஏதும் இல்லை.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 6)

1-1-10. செந்நெல்லார் வயல் சூழ் திருக்கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை
மின்னு நூல் விட்டுசித்தன் விரித்த இப்
பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை பாவமே

பொருள் - சிவந்த நெல் தானியமானது நிறைந்திருக்கிற வயல்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே என்றும் வாழ்பவனும், "நாராயணன்" என்னும் சொல்லின் பொருளாக உள்ளவனும், திருக்கல்யாண குணங்கூட்டங்கள் பரிபூர்ணமாகக் கொண்டவனும் ஆகிய கண்ணன், அவதரித்த விதத்தை, ப்ரகாசத்துடன் கூடிய பூணூலை உடைய பெரியாழ்வார் விரிவாக அருளிச்செய்ததும், ஞானிகள் எப்பொழுதும் பாடும்படியாக உள்ளதும் ஆன இப்பாசுரங்களை, தாய் பாவனையிலிருந்து சொல்ல வல்லவர்களுக்குப் பாபங்கள் இல்லை.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் அவதாரிகை - நிகமத்தில் இத்திருமொழி கற்றார்க்குப் பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (செந்நெலித்யாதி) செந்நெலாலே நிறைந்த வயலாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே நித்யவாஸம் பண்ணுகிற. "திருக்கோட்டியூர் கண்ணன் கேசவன் நம்பி" என்று தொடங்கி, "மன்னு நாரணன்

நம்பி" என்று நிகமிக்கையாலே, ஸாதாரணாSஸாதாரண வ்யாவ்ருத்தமான வாக்ய த்வய குண பூர்த்தியை, "மன்னு நாரணன் நம்பி" என்று அருளிச்செய்கிறார். (பிறந்தமை) பிறந்த ப்ரகாரத்தை யென்றது, முற்பட்ட பிறப்பை ஒளித்துத் தாம் துடங்கின திருவாய்ப்பாடியில் பிறப்பை, கம்ஸ நகரியில் நின்றும் போரப் பெறுகையாலே மறுபிறப்பாக நிகமிக்கிறார்; "புநர் ஜாதம்" என்னக்கடவதிறே.

(மின்னித்யாதி) பட்டர்பிரானாகையாலே "மின்னுநூல்" என்கிறாராதல், "வேதப்பயன் கொள்ளவல்ல விஷ்ணுசித்தன் " என்று இவருடைய விஷ்ணு சப்தமும் அஸாதாரணமாக ஸகல சாஸ்த்ரங்களாலும் ப்ரகாசிக்கையாலே மின்னுநூலென்கிறாராதல். "விஷ்ணுசித்தன்" என்று விஷ்ணுவைத் திருவுள்ளத்திலே யுடையவராகையாலே மற்றொன்றறியாதவர். "விரித்த" என்கையாலே ஸகல சாஸ்த்ரங்களையும் மங்களாசாஸந பர்யந்தமாக விரித்தருளிச் செய்தாரென்கிறது. இம்மங்களாசாஸந தாரதம்யம் பலர்க்கும் உண்டாகையாலே, "இப்பன்னு பாடல்" என்று வ்யாவர்த்திக்கிறது. "வல்லார்க்கு" என்றது, ஸாபிப்ராயமாக வல்லார்க்கென்றபடி; அதாவது, இவ்வபிமாநத்திலே ஒதுங்கினார்க்கும் இப்பிள்ளையுடைய ஸ்த்திதி கமந சயநாதிகளால் இவரைப்போலே வயிறு மறுகவேண்டும் பாபமுமில்லை யென்கிறது.

பிள்ளை திருவடிகளே சரணம்
பெரியாழ்வார் திருமொழி முதல் பத்து முதல் திருவாய்மொழி
ஸம்பூர்ணம்

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – முடிவில், இத்திருமொழி கற்பவர்களுக்கு உண்டாகும் பலன் கூறி நிறைவு செய்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (செந்நெலித்யாதி) செந்நெலாலே நிறைந்திருக்கிற வயல்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே, அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனாய்க் கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற, நாராயண சப்த வாச்யனாய் கல்யாணகுண பரிபூர்ணனானவன் திருவவதரித்த ப்ரகாரத்தை. (மின்னுநூல்

விட்டுசித்தன் விரித்த) பட்டர் பிரானாகையாலே விளங்காநின்றுள்ள திருயஜ்ஞோபவீதத்தையுடையராய், ஸர்வவ்யாபகனான ஸர்வேச்வரனைத் தம் திருவுள்ளத்திலே வைத்துக் கொண்டிருக்கையாலே விஷ்ணுசித்தரென்னும் திருநாமத்தையுடையரான பெரியாழ்வார், திருவவதரித்த காலத்தில் உபலாளநாதிகளோடேகூட விஸ்தரேண அருளிச்செய்த. (இப்பன்னுபாடல் வல்லார்க்கில்லை பாவமே) ரஸ்யதையாலே விசேஷஜ்ஞரானவர்கள் எப்போதுமிருந்து சொல்லும்படியான இப்பாடலை ஸாபிப்ராயமாக வல்லவர்களுக்கு பகவதநுபவ விரோதியான பாபமில்லை.

விளக்கம் – (செந்நெல் இத்யாதி) - சிவந்த நெல்லாலே நிறைந்திருக்கிற வயல்களினால் சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே, திருப்பாற்கடலை விடுத்து வந்து, இந்த உலகில் உள்ள அனைத்துப் பொருட்களைக் காட்டிலும் வேறுபட்ட தனக்கே உரிய திருமேனியை உடையவனாய், தனித்தன்மை கொண்டவனாய், அங்கு என்றுமே வாசம் செய்பவனாய், "நாராயணன்" என்னும் சொல் உணர்த்தும் பொருளாய், திருக்கல்யாண குணங்களைப் பரிபூர்ணமாகக் கொண்டவனாய் உள்ள கண்ணன், திரு அவதாரம் செய்த விதத்தை. (மின்னுநூல் விட்டுசித்தன் விரித்த) - பட்டர்பிரான் ஆகையாலே ப்ரகாசத்துடன் விளங்கும் பூணூலை உடையவராய், எல்லா இடத்திலும் பரந்து கிடந்துள்ள ஸர்வேச்வரனைத் தனது நெஞ்சினுள்ளே வைத்துக் கொண்டிருப்பதால் "விஷ்ணுசித்தர்" என்னும் திருநாமத்தை உடையவரான பெரியாழ்வார், அத்திருவவதார காலத்தில் ஆயர்கள் கொஞ்சி விளையாடினதோடு அருளிச்செய்ததும். (இப்பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை பாவமே) - ப்ரீதியினாலே நிரம்பிய மிக்க அறிவுள்ளவர்கள், எப்போதும் கூறும்படியாகவும் உள்ள இப்பாசுரங்களை, ஒரு தாயின் பாவனையில் இருந்து சொல்ல வல்லவர்களுக்கு, பகவத் அனுபவத்திற்கு முரணான பாபங்கள் இல்லை.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியஜீயர் திருவடிகளே சரணம்
பெரியாழ்வார் திருமொழி முதல் பத்து முதல் திருமொழி ஸம்பூர்ணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 5)

பெரிய திருமொழி வ்யாக்யான ப்ரவேசம்

வ்யாக்யானம் - இவர்பக்கல் அத்வேஷமும் விஷயங்களினுடைய லாகவமுமே இவரை மீட்கைக்குப் பரிகரமாகவும், இவருடைய ரஸிகத்வமே தன் வாசியறிகைக்குப் பற்றாசாகவும், "அநாதிகாலம் பண்ணின பாபாம்சத்தை நம் க்ருபைக்கு விஷயமாக்குவோம்" என்று பார்த்து, இவர் விஷயங்களின் வாசியறிந்து தன்னை யறிகைக்குக், கிழிச்சீரையோடே தநத்தைக் கொடுப்பாரைப் போலே தனக்கு வாசகமான திருமந்த்ரம் முன்னாகத் தன் ஸ்வரூபரூப குணவிபூதிகளை அடங்கக் காட்டிக் கொடுக்கக், கண்டநுபவித்து, "அயோக்யனான வென்னை அதுதானே ஹேதுவாக விஷயீகரித்தான்" என்று க்ருதஜ்ஞராகையாலே ஒருகால் சொன்னதை ஒன்பதின்கால் சொல்லிக் கூப்பிடுகிறார். பகவத்விஷயத்தில் நேர்கொடு நேர் செய்யலாவ தொன்றில்லை, செய்யவேண்டுவது மொன்றில்லை; பண்ணின உபகாரத்துக்குக் க்ருதஜ்ஞராமித்தனையே வேண்டுவது, அசித்வ்யா வ்ருத்தி தோற்ற.

விளக்கம் - இந்தத் திருமங்கை ஆழ்வார், ஸர்வேச்வரன் மீது வெறுப்பு இல்லாமல் இருந்ததாலும், உலக விஷயங்களின் மீது சிறிய அளவிலேயே பற்று கொண்டதாலும், இவரை ஸர்வேச்வரன் தன்னிடம் மீட்டு எடுப்பதற்கு ஏதுவாக இருந்தது. அது மட்டுமன்றி, ஸர்வேச்வரனை வேறுபடுத்திப் பிரித்து அறியவல்ல, இவருடைய அறியும் வேட்கையானதே பற்றுக்கோலாக இருந்தது. இதை எல்லாம்

கண்ட, ஸர்வேச்வரன் “நெடுங்காலமாக இவர் செய்த பாபங்களையெல்லாம் நம் கருணைக்கு உட்படுத்திக் கொள்வோம்” என்று கருதி, இவரை விஷயங்களின் வேறுபாட்டை அறிந்து, ஸர்வேச்வரனான தன்னை அறிவதற்கு, எப்படி உலகில் தானம் செய்கிறவர்கள், பணப் பையோடே, பொருள்களைத் தானம் கொடுப்பார்களோ, அவ்வாறே, தன்னுடைய திருமந்த்ரத்தை முன் நிறுத்தி, தனது ஞானமான மெய்ஞானம் என்கிற ஸ்வரூபத்தையும், தனது வடிவங்களான பல ரூபங்களையும், தனது பல்வேறு குணங்கள் என்றெல்லாம் தனது விபூதிகளான ஐச்வர்யங்களை காட்டிக் கொடுத்தான். இதனை செய்ந்நன்றி மறவாத ஆழ்வார் அனுபவித்து, “எவ்விதத்திலும் தகுதியற்ற என்னை, அந்த தகுதியி இன்மை என்பதையே காரணமாக வைத்து ஏற்றுக்கொண்டான்” என்று கருதி, ஒருமுறை சொன்னதையே ஒன்பது தடவைக் கூறினார். ஸர்வேச்வரன் விஷயத்தில், வெளிப்படையாக கைம்மாறு செய்யக்கூடியதும், செய்யவேண்டியதும் என்று ஒன்றும் இல்லை. செய்த உதவிக்கு, உயிரில்லாத பொருட்களைக் காட்டிலும் வேறுபட்டு இருப்பதை உணர்வதே, செய்ந்நன்றி மறவாது இருத்தல் ஆகும்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்